## الدرس الأول
## أحكام الأطعمة

## பாடம் - 1
## உணவுகளின் சட்டங்கள்

அல்லாஹ் தனது அடியார்களைத் தூய்மையானவற்றை உண்ணுமாறு ஏவியுள்ளான். அசுத்தமானவற்றை உண்ண வேண்டாமெனத் தடுத்துள்ளான்.

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُلُوا مِنْ طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ ...﴾ [ البقرة:١٧٢ ]

'நம்பிக்கைகொண்டோரே! நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையானவற்றை உண்ணுங்கள்'(2:172) உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை சட்டத்தின் அசல்நிலை ஆகும் என்பதே! எவற்றை உண்ணக்கூடாதென தடுக்கப்பட்டுள்ளதோ அவற்றைத்தவிர! எனவே அல்லாஹ் தனது அடியார்களுக்கு தூய்மையானவற்றை அனுமதித்திருக்கிறான் என்று சொன்னால் அதன் மூலம் அவர்கள் பயன் பெறவேண்டும் என்பதற்காகத்தான். ஆகையால் பாவங்களுக்கு அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பயன்படுத்தக் கூடாது.
என்னென்ன உணவு, பானங்களை அல்லாஹ் தடை செய்யப்பட்டதாக (ஹராமாக) ஆக்கியுள்ளானோ அவற்றைத் தன்னுடைய அடியார்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளான்.

﴿وَقَدْ فَصَّلَ لَكُمْ مَا حَرَّمَ عَلَيْكُمْ إِلَّا مَا اضْطُرِرْتُمْ إِلَيْهِ﴾ [الأنعام:١١٩]

அல்லாஹ் கூறுகிறான்: 'நீங்கள் நிர்பந்திக்கப்படும்போது தவிர (மற்ற நேரங்களில்) உங்களுக்கு அவன் தடை செய்ததைத்தெளிவு படுத்திவிட்டான்.'(6:119) எனவே அல்லாஹ் ஹராமென தெளிவாகக் கூறாதவை ஹலாலாகும்.

((إن الله فرض الفرائض فلا تضيعوها وحد حدودا فلا تعتدوها وحرم أشياء فلا تنتهكوها و سكت عن أشياء رحمة لكم من غير نسيان فلا تبحثوا عنها)) (الطبراني)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் சில கடமைகளைக் கடமையாக்கியுள்ளான்- அவற்றை பாழாக்கிவிடாதீர்கள். சில வரம்புகளை விதித்துள்ளான் - அவற்றைக் கடந்து விடாதீர்கள். சிலவற்றைத் தடை செய்துள்ளான் - அவற்றை மீறிவிடாதீர்கள், சில விஷயங்கள் பற்றி எதுவும் கூறாமல் மௌனம் சாதித்துள்ளான். மறதியினால் அல்ல, உங்களின் மீது கிருபை கொண்டு. அவை பற்றி நுணுகிப்பார்த்துக் கொண்டிருக்காதீர்கள்.' (தப்ரானி)

உணவுகள், பானங்கள், உடைகள் இவற்றில் அல்லாஹ்வும் அவன் தூதரும் ஹராம் என்று தெளிவாகக் கூறாதவற்றை நாம் ஹராமாக்கக் கூடாது. அடிப்படை என்ன வென்றால் தூய்மையான கெடுதியிழைக்காத அனைத்து உணவுகளும் ஹலாலானவையே. செத்தவை, இரத்தம், மதுபானம், புகையிலை, அசுத்தம் கலந்தவை போன்ற அசுத்தமான அல்லது கெடுதியிழைக்கக்கூடிய உணவுகள் நீங்கலாக! ஏனெனில் இவை ஹராமாகும். காரணம் இவை அசுத்தமானவையாகவும் கெடுதியிழைக்கக்கூடியவையாகவும் உள்ளன.

செத்தவை என்றால் மார்க்கம் அனுமதித்த முறையில் அறுக்கப்படாமல் உயிர் பிரிந்தவை ஆகும். இரத்தம் என்பது அறுக்கப்பட்ட பிராணியிலிருந்து வெளியேறியதாகும். அறுக்கப்பட்ட பின் மாமிசத்திலும் நரம்புகளிலும் தங்கியிருக்கும் இரத்தம் ஹலாலாகும்.